අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

மගේ යොමුව / எனது இல. / My Ref.
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date

பெயர்

நேர்முக பரீட்சை இலக்கம்

**<u>தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகியுள்ள அதிபர் பதவிகளுக்கு அலுவலர்களை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு - இலங்கை அதிபர் சேவை தரம் I</u>**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவின் வேண்டுதலின் நிமித்தம் நாடெங்கும் அமைந்துள்ள இலங்கை அதிபர் சேவை தரம் I யின் அலுவலர் அதிபராக பதவி வகிக்க வேண்டிய 111 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முக பரீட்சைக்கு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

02. அதற்காக இசுறுபாய , கல்வி அமைச்சின் 04 மாடியின் கேடபோர் கூடத்துக்கு ……… திகதி மு.ப /பி.ப …………க்கு வருகை தருமாறு தயவுடன் அறியத்தருகின்றோம். அத்தினம் கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் நிறுவனத் தலைவரால் சான்றுகை செய்யப்பட்ட உரிய ஆவணங்களின் நிழற் பிரதிகளின் (இல I தொடக்கம் VIII வரையான ஆவணங்கள்) கோப்பு கீழ்க்காணும் வரிசைக் கிரமத்தில் தயாரிக்கப்பட்டு தங்களின் பெயர் மற்றும் நேர்முகப்பரீட்சை இலக்கம் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்வைக்கப்பட வேண்டும்.

I. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்

II, தேசிய அடையாள அட்டை

III. பெயரில் யாதேனும் மாற்றங்கள் இருப்பின் சத்தியக் கடதாசி (மாற்றங்கள் இருக்குமாயின் மட்டுமே)

IV. சேவை அனுபவத்தை உறுதி செயவதற்காகa). இலங்கை அதிபர் சேவையின் தரம் I க்கு உயர்த்தப்பட்ட கடிதம்.·. உள்வாங்கப்பட்ட கடிதம்.·.நியமன கடிதம் (உயர்த்தப்பட்ட கடிதம் கிடைக்காது உள்ளதாயின் உயர்த்தப்படுவதற்கான சகல தகமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமைக்கான திணைக்கள தலைவரின் அறிக்கை)

b). இலங்கை அதிபர் சேவைக்கு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து 21020.12.04 திகதி வரை நிறுவன தலைவரினால் வழங்கப்பட்ட சேவை தொடர்பான சான்றிதழ் - மாதிரி படிவம் 01

V. கல்வி தகமை -தொடரிலக்கம் 02யின் கீழ்

VI. புள்ளித் திட்டத்தின் தொடரில. 03 மற்றும் தொடரில. 04யின் கீழ் தகமைகளை உறுதி செய்வதற்காக,

a) ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு பொருத்தமான சான்றிதழ்/ ஆவணம்

b) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அறிவு தொடர்பாக பெற்றுள்ள சான்றிதழ்/ ஆவணம

VII. சேவை மதிப்பீடு தொடரில 05 யின் கீழ்

VIII. கல்வியியலுக்கு உரித்தான ஆய்வு மற்றும் வெளியீடு தொடரில. 06யின் கீழே

a) விண்ணப்பம் கோரல் அறிவித்தலின் புள்ளித் திட்டத்தின் இல. 6யின் கீழ் தங்களால் முன்வைப்பதற்கு உத்தேசித்த கல்வியியல் ஆய்வு மற்றும் வெளியீடுகளின் சான்றுகை செய்யப்பட்ட பிரதிகளை முன்வைக்கும் போது அந்த ஆய்வு/ வெளியீடு எதுவென தெளிவாக காட்டப்பட்ட பக்கம்/ பக்கங்கள் அந்த வெளியீட்டின் படைப்பு/வெளியீடு என தங்கள் பெயர் குறிப்பிடப்பட்ட பக்கம் /பக்கங்களில் நிறுவன தலைவர் சான்றுகை செய்த பிரதியுடன் உரிய ஆய்வு மற்றும் வெளியீட்டின் மூலப்பிரதி முன் வைக்கப்பட வேண்டும்.

03. புள்ளிகள் பெறுவதற்காக முன்வைக்கப்படும் ஆவணங்களின் வலது பக்க மேல் மூலையில் புள்ளித் திட்டத்தில் எந்த தொடரிலக்கத்தின் கீழ் புள்ளி பெற்றுக்கொள்ளப்படுவதற்காக முன்வைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

உதா:- தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அறிவுக்காக முன்வைக்கப்படும்

சான்றிதழ் - தொடரில 04

அதன்படி நிழற் பிரதி கோப்பினை தயாரித்தப் பின் இத்துடன் இணைத்துள்ள மாதிரிப் படிவ இல. 02 பூரணப்படுத்தப்பட்டு கோப்பு சகிதம் நேர்முக பரீட்சை சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். பகிரங்கப்படுத்தப்பட்ட புள்ளித் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ‘குறிப்பு; குறித்து மிகுந்த கவனத்திற் கொண்டு ஆவணங்களை முன்வைக்க வேண்டும்.

04. இந்த நேர்முகப் பரீட்சையில் தங்களால் காட்டப்படும் செயலாற்றம் மற்றும் தங்களின் கல்வித் தகமைகளுக்கமைய ஈட்டிக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் ஒட்டுமொத்த திறமைகளின் முந்துரிமை அடிப்படையில் மட்டுமே அதிபர் பதவி வெற்றிடங்களாகியுள்ள தேசிய பாடசாலைகளில் பதவிக்காக நியமிக்கப்படுதல் மேற்கொள்ளப்படும்.

05. நேர்முக பரீட்சைக்கு தோற்றுவது மட்டுமே வெற்றிடமாகியுள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவியை பெற்றுக் கொள்வதற்கான உரித்து அல்ல என்பதோடு, விண்ணப்பம் கோரிய இறுதி தினமான 2020.12.04 திகதிக்கு பின்னர் விண்ணப்பம் அனுப்பிய அலுவலர்கள் நேர்முக பரீட்சைக்காக அழைக்கப்பட்டு நேர்முக பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள் என்பது பின்னர் அறியவரின் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி நியமனம் பெறுவதற்கான தகமை அல்ல என்பதை கவனத்திற் கொள்ளுமாறு கோருகின்றோம்.

டபுள்யூ. எம்.என். ஜே. புஷ்பகுமார
மேலதிக செயலாளர்
(கல்வி சேவை தாபனம்)
கல்வி செயலாளர்க்காக

**கவனத்துக்கு**: தாங்கள் உரிய தினத்தில் நேர்முக பரீட்சைக்கு பங்குபற்றல் கட்டாயமென்பதோடு நேர்முக பரீட்சைக்கு தோற்றும் போது மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தையும் சரியாகக் எடுத்து வரவேண்டும் என்பதோடு நேர்முகப் பரீட்சையின் பின் எதுவித காரணங்களின் அடிப்படையில் எதுவித ஆவணங்களும் தகமையை உறுதி செய்து கொள்வதற்காக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென மேலும் கவனத்திற் கோருகின்றோம்.